தேதி.19.06.2025

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**MCOP.No.**89/2022 திரு.பாபு த/பெ.மாத்துண்ணி ம.சா. 1

**ம.சா.1: சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தை நான் நேரடியாகப்பார்க்கவில்லை என்றால் சரிதான். யார் பார்த்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சாமுவேல்ராஜ் என்பவர் பார்த்தார். சாமுவேல்ராஜ் சம்பவத்தைப்பற்றி காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் அடிபட்டவரை நான் எப்போது பார்த்தேன் என்றால் கி.ஆர் பஜாரில் வைத்து சம்பவயிடத்திலேயே காலை 9.00 மணியளவில் பார்த்தேன். சம்பவம் சுமார் 8.30 மணியளவில் நடந்தது என்று சொன்னார்கள். சம்பவத்தை பற்றி புகார் கொடுத்தவர்கள் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் சாஜி என்பவர் புகார் கொடுத்தார். சாஜிக்கு சம்பவத்தை பற்றி எப்படித் தெரியும் என்றால் சாமுவேல்ராஜ் சொல்லி தெரியும். சாமுவேல் ராஜ் எனக்கு எப்படித் தெரியும் என்றால் தூரத்து உறவு. சாமுவேல் ராஜ் என்ற உறவு முறை என்றால் என்னுடைய பெரிய அக்காவின் மகன். சாஜி விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனம் செல்லக்கூடியதா என்றால் அது பற்றி தெரியாது. எந்தப்பேருந்து என் மகன் மீது மோதியதாக கூறினார்கள் என்றால் கர்நாடகா அரசு பேருந்து மோதியதாக கூறினார்கள். கர்நாடகா அரசு பேருந்து மோதியதாக சொல்வது பொய் என்றும், அந்த வழித்தடத்தில் வேறு பேருந்துகளும் சென்று கொண்டிருந்தது என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்தியதாக கூறப்படும் பேருந்து என் மகன் மீது எந்த விபத்தையும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக கர்நாடகா அரசு பேருந்து மோதியதாக பொய்யான புகார் கொடுத்தார்கள்

என்றால் சரியல்ல. என் மகன் ஓட்டிச்சென்ற வாகனத்தின் பதிவு எண் என்னவென்றால் 1859 சுசுக்கி இருசக்கர வாகனம். மேற்படி வாகனம் யார் பெயரில் உள்ளது என்றால் என்னுடைய பெயரில் உள்ளது. காப்பீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காப்பீடு நிறுவனத்தை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளேன். மேல்நடவடிக்கை தேவையில்லை என்று நீக்கரவு செய்யப்பட்டார் என்றால் சரிதான். எனது மகனின் அஜாக்கிரதையாக அதிவேகமாக ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தியதால் தான் மேற்படி விபத்தானது ரோட்டின் நடுப்பகுதியல் நடந்தது என்றால் சரியல்ல. என் மகன் தலைக்கவசம் அணிந்துவந்தார் என்றும், அது உடைந்துவிட்டது என்று கூறியுள்ளேன் மேற்படி தலைக்கவசம் நான் சென்றபோது எங்கு கிடந்தது என்றால் சம்பவயிடத்தில் இருந்தது. ரோட்டின் ஓரமாகக் கிடந்தது. எனது மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது. காவல் துறையினர் வாகனத்தை தணிக்கை செய்த போது விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனத்தின் மீது எந்த தடையமும் இல்லை என்று அதை அனுப்பிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அது பற்றி எனக்கு தெரியாது. புகார் எப்போது கொடுத்தார்கள் என்றால் எனக்கு சரியாக நினைவில் இல்லை. நான் செல்வாக்கை பயன்படுத்தி அரசு பேருந்தின் ஆவணங்களை பெற்று பொய்யாக புகார் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பெரிய வாகனம் மோதியதாக புகார் கொடுத்தால் தான் நஷ்ட ஈடு பெற முடியும் என்று பொய்யாக இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 15 நாட்கள் கழித்து அந்த வழியாக விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் பேருந்தை நிறுத்தி அதன் ஆவணங்களை பெற்று காவல் துறையினர் இந்த வழக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. காவல் துறையினர் பேருந்தில் எந்த தடையமும் இல்லை என்று சொல்லி அரசு பேருந்தின் அதிகாரிகளிடமிருந்து ஆவணங்களை பெற்று இந்த வழக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து மேற்படி பேருந்தால் ஏற்பட்டது என்பதற்கு எந்த தடையமும் இல்லாமல் வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அதிக நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதால் எனது மகன் ஓட்டி வந்த

வாகனத்திற்கு காப்பீடு வாங்காமல் பேருந்தின் மீது பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நஷ்ட ஈடு பெற வேண்டும் என்று சொல்லி பொய்யாக இந்த புகார் கொடுத்துள்ளேன் என்றும், நான் இந்த நஷ்ட ஈடை பெற தகுதியுடையவர் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்ட ஈடு தொகையெல்லாம் அடிப்படை ஆதாரம் அற்றது என்றும், அதனால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.19.06.2025